


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 359 | 4 Pages | 25.7.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 359 | 4 பக்கங்கள் | 25.7.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்**

**விளக்கம்:**
**முற்றத் துறந்தவரே உயர்ந்த நிலையினர் ஆவர், அவ்வாறு துறக்காத மற்றவர் அறியாமையாகிய வலையில் அகப்பட்டவர் ஆவர்.**

## நாக்பூர் விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்



மும்பை, ஜூலை 25

மராட்டிய மாநிலம், நாக்பூர் விமான நிலையத்துக்கு நேற்று காலை இமெயில் ஒன்று வந்தது. இந்த மெயிலில் விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு இருந்தது. இதுகுறித்த தகவலின் பேரில் போலீசார், வெடிகுண்டு தடுப்பு படையினர் விமான நிலையத்துக்கு விரைந்து வந்து அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

விமானநிலையத்தில்அங்குலம்அங்குலமாகசோதனைநடத்தியநிலையில், பயணிகளின்உடைமைகளிலும்சோதனைநடத்தினர். இதுபயணிகளிடையே பரபரப்பைஏற்படுத்தியது.இருப்பினும்இந்தசோதனையில்சந்தேகப்படும்படி எதுவும் சிக்கவில்லை. பதற்றத்தை ஏற்படுத்த யாரோ விஷமி மிரட்டல் விடுத்தது தெரியவந்தது. இதையடுத்து இமெயிலில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த ஆசாமி மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அரசு பள்ளி விழாவில் முன்னாள் அமைச்சரை புகழ்ந்து பேசிய தலைமை ஆசிரியர் பணியிட மாற்றம்



ஈரோடு, ஜூலை 25

ஈரோடு மாவட்டம் நம்பியூரில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. 75 ஆண்டுகள் பழமையான இந்த பள்ளியின் தலைமை ஆசிரியராக ஆனந்தராஜ் என்பவர் பணியாற்றி வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து வகுப்பறைகளுக்கு இருக்கைகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டார்.

விழாவில் தலைமை ஆசிரியர் ஆனந்தராஜ் வரவேற்று பேசியுள்ளார். அவர் பேசும்போது, கே.ஏ.செங்கோட்டையன் தொடர்ந்து 40 ஆண்டுகளாக எம்.எல்.ஏ.வாக இருந்து வருகிறார். அவரை வென்றிட இங்கே யாரும் இல்லை என்று புகழ்ந்ததாக கூறப்படுகிறது. மேலும் விழாவில் மதம் சார்ந்த பாடல்களை ஒலிபரப்பவிட்டு, மாணவர்களை திரும்ப பாடச்சொல்லி உள்ளார். இது குறித்த வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இதையடுத்து ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி சுப்பாராவ் தலைமையில் அதிகாரிகள் நம்பியூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு நேரில் சென்று தலைமை ஆசிரியர் ஆனந்தராஜிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து அவரை பவானி அருகே உள்ள தொட்டம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பணியிட மாறுதல் செய்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி சுப்பாராவ் உத்தரவிட்டார்.

## ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் திடீர் கோளாறு அவசரமாக தரையிறக்கம்



கோழிக்கோடு, ஜூலை 25

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் இருந்து 188 பயணிகளுடன் கத்தார் தலைநகர்தோஹாவுக்கு நேற்று காலை 9 மணிக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் புறப்பட்டது. அந்த விமானம் புறப்பட்டுச்சென்ற 2 மணி நேரத்தில் நடுவானில் பறந்தபோது அதில் திடீரென்று தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதையடுத்து அந்த விமானம், கோழிக்கோடு விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

இதுபற்றி விமானநிலைய அதிகாரிகள் கூறுகையில், விமானத்தின் கேபின் ஏ.சி.யில் சில தொழில்நுட்பக் கோளாறு இருந்தது. இதையடுத்து அந்த விமானம் மீண்டும் கோழிக்கோடு விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. அதில் இருந்த பயணிகள், மாற்று விமானம் மூலம் தோஹா செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்றனர். இதேபோல் ஆமதாபாத்தில் இருந்து டையூ செல்ல இருந்த இண்டிகோ விமானத்தில், தொழில் நுட்ப கோளாறு இருந்தது கண்டு பிடிக்கப்பட்டதால் அந்த விமானம் ரத்து செய்யப்பட்டது.

## படுக்கை அறையில் ரகசிய கேமரா: கணவர் செய்த காரியம் அதிர்ந்து போன பெண் அதிகாரி



மும்பை, ஜூலை 25

புனேயில் 31 வயது அரசு பெண் அதிகாரி வசித்து வருகிறார். குரூப்2 அதிகாரியான இவரது கணவரும் அரசு அதிகாரியாக உள்ளார். இந்தநிலையில் பெண் அதிகாரி கணவர் மீது அம்பேகாவ் போலீசில் பரபரப்புபுகாரைஅளித்தார். அந்தப்புகாரில் கூறப்பட்டு இருப்பதாவது:

எனதுகணவர்மற்றும்அவரதுகுடும்பத்தினர்என்னைமனரீதியாகவும், உடல் ரீதியாகவும் துன்புறுத்துகின்றனர். எனது கணவர் கார் மாத தவணை கட்ட பெற்றோரிடம் இருந்து ரூ.1 ½ லட்சம் வாங்கி வருமாறு அழுத்தம் தந்தார். நான் வாங்கி வர மறுத்தபோது கணவர் என்னை தாக்கினார்.

படுக்கை அறையில் கேமராகொடுமையின் உச்சமாக எனது கணவர் வீட்டின்படுக்கைஅறை, குளியலறையில் ரகசிய கேமராவைத்து எனது தனிமையை படம் பிடித்து வைத்துள்ளார். அவர் சொல்வதை கேட்கவில்லை எனில் அந்த வீடியோக்களை பரப்பி விடுவேன் என மிரட்டுகிறார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அந்தப்புகாரில் கூறப்பட்டு இருந்தது.

இந்தப்புகார் குறித்து போலீசார் பெண் அதிகாரியின் கணவர், மாமியார், மைத்துனிகள், அவர்களது கணவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ராசேந்திர சோழனின் பிறந்த நாளில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூலை 25

மாமன்னர் ராசேந்திர சோழனின் பிறந்த நாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டு பணிகளும், சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்படுவது குறித்து தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் என பெரும்புகழ் எய்திய தமிழ் மாமன்னர் ராசேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரையை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடிட 2021ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது நமது திராவிட மாடல் அரசு!

அவரது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ பேரரசின் வரலாற்று சிறப்புகளையும் கடல்கடந்த வணிக தொடர்புகளையும் பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்து, அதற்கும் கடந்த ஜனவரி மாதம் அடிக்கல்



நாட்டினேன். காண்போரை கவர்ந்திடும் வண்ணம் அது எழுந்து வருகிறது.

இவற்றின் தொடர்ச்சியாக, ராசேந்திர சோழனின் பிறந்த நாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டு பணிகளும் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்! என தெரிவித்து உள்ளார்.

# தாராபுரத்தில் நடிகர் சூர்யாவின் 50'வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது ரசிகர்கள் ஒரு நாள் முழுவதும் மக்களுக்கு அன்னதானம் வழங்கினர்

நடிகர் சூர்யா அவர்களின் 50'ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி சூர்யா ரசிகர்கள் "மாதம் ஒரு நற்பணி" என்ற கருத்தினை முன்னிட்டு மாதந்தோறும் ஒரு சமூகத்திற்கு நற்பணி செய்து வருகின்றனர்,எனவே நடிகர் சூர்யாஅவர்களின்50'ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இன்று தாரா



புரத்தில் ஒரு நாள் முழுவதும் மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது,

மேலும் பல நற்பணிகளை மேற்கொண்டர்,

இந்நிகழ்வு திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்களான குகன் மற்றும் அகிலன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சூர்யா நற்பணி இயக்க உறுப்பினர்களான தன்வின், ஆனந்தன், மாய கிருஷ்ணன், மணிகண்டன், செல்வக்குமார், குமார் ,சரவணன், புகழ் மணி,பிரணீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்

# திருநெல்வேலி: காணாமல் போன ரூ.18 லட்சம் மதிப்புள்ள 100 செல்போன்கள் மீட்பு உரியவர்களிடம் எஸ்.பி. ஒப்படைத்தார்

திருநெல்வேலி ஜூலை 25

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் நேரடி கண்காணிப்பில், சைபர் கிரைம் பிரிவு ஏ.டி.எஸ்.பி. முருகன் மேற்பார்வையில், போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமா தலைமையில், திருநெல்வேலி மாவட்டத்தில் செல்போன்கள் தொலைந்து போனதாக பெறப்பட்ட புகார்களில் 100 செல்போன்கள் கைப்பற்றப்பட்டு, இன்று (24.07.2025) மாவட்ட எஸ்.பி.யால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த செல்போன்களின் மொத்த மதிப்பு ரூ.18 லட்சத்து 18 ஆயிரத்து 873 ஆகும். மேலும் காணாமல் போன அல்லது தவறவிட்ட செல்போன்கள் தொடர்பாக புகார் அளிக்க CEIR Central Equipment Identity Register https://www.ceir.gov.in/ என்ற இணையதளம்இந்தியதொலைத் தொடர்பு துறையால் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் புகார்தாரர் தனது தொலைந்து போன அல்லது தவறவிட்ட செல்போன் தொடர்பான விவரங்களை பதிவு செய்து புகார்அளிக்கலாம் அல்லது காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மனு ரசீது பதிவு செய்து புகார் அளிக்கலாம். இவ்வாறு புகார் கொடுத்தபின் மனுதாரர் செல்போன் வேறு ஒருவரால் பயன்படுத்த முடியாதவாறு Block செய்யப்படும். மேலும் மனுதாரர் செல்போனில் புதிதாக சிம்கார்டு பயன்படுத்திய விபரங்கள் தொடர்பான அறிவிப்பு மனுதாரருக்கு உடனடியாக அனுப்பப்படும். காணாமல் போன செல்போனை பயன்படுத்தி பல குற்றங்கள் செய்ய வாய்ப்பு உள்ளதால்



தொலைந்த அல்லது காணாமல் போன செல்போன் குறித்து உடனே அருகில் உள்ள காவல் நிலையத்தில்புகார்அளித்தால், தொலைந்து போன அல்லது உடனடியாக தவறவிட்ட செல்போனை மீட்க முடியும் என பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் சைபர் குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டால் உடனடியாக 1930 என்ற இலவச எண்ணை தொடர்பு கொண்டு புகார்அளிக்கலாம்அல்லது https://cybercrime.gov.in/ என்ற இணையதளத்தில் புகார் அளிக்கலாம் என்று திருநெல்வேலி மாவட்ட சைபர் கிரைம் காவல்துறை தெரிவித்துள்ளது.

# 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணை: உதயநிதி

சென்னை, ஜூலை 25

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து, 6 முதல் 9 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் மொழிப் பாடத்திறன் மற்றும் கணிதத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான "திறன்" (THIRAN Targeted Help for Improving Remediation & Academic Nurturing) இயக்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகங்களை துணை முதலமைச்சர் வெளியிட்டார்.

மேலும் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குக் கணினிசார் அடிப்படை அறிவியலையும், செயற்கை நுண்ணறிவுத் திறன் மற்றும் அதனைப் பயன்படுத்தும் நுட்ப அறிவியலையும் கற்பிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள TNSPARK (Tamil Nadu School Programme for Artificial Intelligence, Robotics and Knowledge of Online Tools) என்ற புதிய பாடத்திட்ட பாடநூல்களையும் வெளியிட்டார்.

இதன் பின்னர் நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது;

"ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் வெற்றி பெற்ற 2 ஆயிரத்து 457 தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன், பெருமையடைகின்றன். அதோடு சேர்த்து பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக 'திறன்' மற்றும் TN Spark ஆகிய இரண்டு முக்கியமான முன்னெடுப்புகளையும் இங்கே தொடங்கி வைப்ப



தில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எனக்கு எப்பவுமே ஆசிரியர்களைப் பார்த்தாலே கொஞ்சம் பதற்றம் வந்துவிடும். ஒன்றிரண்டு ஆசிரியர்களை பார்த்தாலே பதற்றம் வந்து விடும். இன்றைக்கு இத்தனை ஆசிரியர்கள், 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் வந்து இருக்கிறீர்கள். எனவே உங்களைப் பார்க்கும்போது கொஞ்சம் பதற்றம் அதிகமாகவே இருக்கிறது. இருந்தாலும், உங்களை எல்லாம் இன்றைக்கு ஒரே இடத்தில் பார்க்கும் போது மிகவும் பெருமையாக இருக்கின்றது.

மாணவர்களுக்கு 'அகரம்' சொல்லிக் கொடுத்து, அவர்கள் படிக்கப் போகின்ற Robotics, AI போன்ற பெரிய, பெரிய படிப்புக்கெல்லாம் அடித்தளம் இடுவது தொடக்கக் கல்வி ஆசிரியர்களாகிய நீங்கள் தான். உங்களிடமிருந்து தான் கல்வியை மட்டுமின்றி இன்றைக்கு உலகையும் மாணவச் செல்வங்கள் கற்றுக் கொள்ள இருக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட ஆரம்பக் கல்வியை வழங்கும் பணியை தொடங்கவுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் போற்றுதலுக்கு உரியவர்கள், பாராட்டுக்கு உரியவர்கள். திராவிட மாடல் அரசு அமைந்த நாள் முதல், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தீட்டுகின்ற ஒவ்வொரு திட்டமும், வரலாற்றுச் சாதனையாக உயர்ந்து நிற்கின்றது.

தொடக்கக் கல்வியில் 100 சதவீதம் இடைநிற்றல் இல்லாத ஒரே மாநிலம் இந்தியாவில் தமிழ்நாடு மட்டும் தான். அதற்கு காரணமும் வந்திருக்கக்கூடிய ஆசிரியர்கள் நீங்கள் தான். இதனை நான் சும்மா சொல்லவில்லை. மத்திய அரசினுடைய புள்ளிவிவரங்கள் இதை சொல்கின்றன. அத்தகைய சிறப்புமிக்க கல்வித் துறையில் பணியேற்கக்கூடிய உங்களுக்கெல்லாம் நான் சொல்வது ஒன்றே ஒன்றுதான். ஊர்கூடி இழுக்க வேண்டிய அந்த கல்வி எனும் தேருக்கு தொடக்கக் கல்வி ஆசிரியர்களாகிய நீங்கள்தான் அச்சாணி.

இவ்வாறு அவர் பேசினார்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு: 9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# வெளிமுகமை மூலம் அரசு நிறுவனத்தில் ஆட்களை நியமிப்பது பணியாளர் விரோதக் கொள்கை: ஓ. பன்னீர்செல்வம் பேச்சு

சென்னை ஜூலை 25

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



வீட்டுமனைகள், வணிக மனைகள் வாங்குபவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறைக் குழுமம் அமைக்கப்பட்டு, இதனை நடைமுறைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு கட்டட மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) விதிகள் உருவாக்கப்பட்டன. இது முழுக்க முழுக்க தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்பாகும்.

தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இதன்படி, பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், ஆணையங்கள், சட்டரீதியானஅமைப்புகள் போன்றவற்றில் உள்ள பணியிடங்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும் என்று அறிவித்தது. ஆனால், இதற்கு முற்றிலும் முரணான வகையில், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், சட்டரீதியான அமைப்புகள் போன்றவற்றில் உள்ள பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, வெளிமுகமை மூலம் பணியாளர்களை நியமிக்கும் முறையை தி.மு.க. அரசு கடைபிடித்துவருகிறது. இதனைக் கண்டித்து நான் பல அறிக்கைகள் விடுத்துள்ளேன். இருப்பினும், இதனை தி.மு.க அரசு கண்டுகொள்ளவில்லை. மாறாக, தனியார் மூலம் ஆட்களை நியமிக்கும் முயற்சியில் தி.மு.க. அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில், தற்போது தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறைக் குழுமத்தின் (Tamil Nadu Real Estate Regulatory Authority) அலுவலகப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, சட்ட ஆலோசகர், உதவியாளர், தரவு உள்ளீட்டாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை நிரப்பும் வகையில் மனித வள நிறுவனங்களை தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் தேர்வு செய்து வருவதாக தகவல்கள் வருகின்றன. இது கடும் கண்டனத்திற்குரியது.

இளைஞர்கள் படித்து விட்டு அரசு வேலைக்காக காத்திருக்கின்ற நிலையில், அண்மையில் தொகுதி 4 காலிப் பணியிடங்களுக்கான தேர்வினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தியுள்ள நிலையில், அவற்றில் வெற்றி பெற உள்ள இளைஞர்களைக் கொண்டு தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுப்பதுதான் பொருத்தமாகவும், முறையாகவும் இருக்கும். இதற்கு மாறாக, வெளிமுகமை மூலம் அரசு நிறுவனத்தில் ஆட்களை நியமிப்பது என்பது பணியாளர் விரோதக் கொள்கை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டத்திற்கு மதிப்பளிக்கும் வகையில், தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்திற்குத் தேவையான பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பவும், வெளிமுகமை மூலம் ஆட்களை நியமனம் செய்யும் முறையை ரத்து செய்யவும் முதல்அமைச்சரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நெல்லையில் பழைய பென்ஷன் திட்டத்தை அறிவிக்க வலியுறுத்தி போக்குவரத்து தொழிலாளர்கள் தர்ணா

திருநெல்வேலி ஜூலை 25

நெல்லை வண்ணாரப்பேட்டையில் உள்ள தாமிரபரணி டெப்போ முன்பு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு போக்குவரத்து சிஐடியு சங்கம், விரைவு போக்குவரத்து ஊழியர் சங்கம் மற்றும் ஓய்வு பெற்றோர் நல அமைப்பு சார்பில் தர்ணா போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தின் போது, திமுக தேர்தல் வாக்குறுதிப்படி பழைய பென்சன் திட்டத்தை அறிவித்திட வேண்டும். ஓய்வு பெற்ற ஊழியர்களின் 23 மாத ஓய்வூதிய பலன்கள், மருத்துவ காப்பீடு, முழுமையான அகவிலைப்படி உயர்வு வழங்கிட வேண்டும். தனியார்மயம், ஒப்பந்த முறையை கைவிட வேண்டும். 8 ஆண்டுகளாக காத்திருக்கும் வாரிசு பணியாளர்களுக்கு கல்வித் தகுதி அடிப்படையில் பணி வழங்கிட வேண்டும். குறைந்தபட்ச பென்சன் ரூ.7,850 அறிவித்திட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.



இந்த தர்ணா போராட்டத்துக்கு சிஐடியு தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழிலாளர்கள் சங்க மண்டல பொதுச்செயலாளர் ஜோதி தலைமை வகித்தார்.

எஸ்இசிடிசி ரேவா சங்க பொதுச் செயலாளர் வெங்கடாசலம் தர்ணா போராட்டத்தை தொடங்கி வைத்தார். போராட்டத்தில் பொறுப்பாளர் கண்ணன், துணைத் தலைவர் மரிய ஜான் ரோஸ் எஸ்இசிடிசி1 கிளைச் செயலாளர் முருகன், துணைபொதுச் செயலாளர் அமல்ராஜ், எஸ்இசிடிசி2 கிளை செயலாளர் பொன்ராஜ் துணைத் தலைவர் மணி, சிஐடியு மாவட்ட செயலாளர் முருகன், துணைத் தலைவர் வன்னியபெருமாள், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் கூட்டமைப்பின் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோமதிநாயகம்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்க மண்டல தலைவர் காமராஜ்,

எஸ்இசிடிசி துணை செயலாளர் அருண், டிஎன் எஸ்டிசி தூத்துக்குடி முன்னாள் கிளை மேலாளர் கிருபாகரன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில குழு உறுப்பினர் பாஸ்கரன் போராட்டத்தை நிறைவு செய்து பேசினார். சங்க மாவட்ட பொருளாளர் சங்கிலி பூதத்தான் நன்றி கூறினார். இந்த தர்ணா போராட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அரசின் செய்தி தொடர்பாளர்களாக 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமித்ததை எதிர்த்து ஐகோர்ட்டில் வழக்கு

சென்னை, ஜூலை 25

தமிழ்நாடு அரசுத் துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் மற்றும் தேவையான இனங்களில் செய்தி ஊடகங்கள் மூலமாக சரியான நேரத்தில் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், ககன்தீப் சிங் பேடி, தீரஜ் குமார், பெ. அமுதா ஆகிய 4 பேரை அரசின் செய்தித் தொடர்பாளர்களாக நியமித்து கடந்த 14ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்தார்.



இந்த உத்தரவை எதிர்த்து சென்னையை ஐகோர்ட்டில் டி.சத்தியகுமார் என்பவர் பொது நல வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், முறையாக அரசாணை பிறப்பித்து அரசிதழில் வெளியிடாமலும், உரிய நடைமுறைகளை பின்பற்றாமலும், 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைசெய்தித்தொடர்பாளர்களாக நியமித்தது சட்டப்படி செல்லாது. செய்தித் தொடர்பாளர்களாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமித்துள்ளதாக பத்திரிகை செய்திக் குறிப்பு மூலம் தெரிவித்தது, நிர்வாக அத்துமீறல் ஆகும்.

இதன் மூலம் அரசு அதிகாரத்தை பயன்படுத்தி, ஆளுங்கட்சிக்கு சாதகமான தகவல்களை வெளியிடும் அபாயம் உள்ளது. இது அரசியல் சாசன கொள்கைகளுக்கு விரோதமானது என்பதால், 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அரசு செய்தித் தொடர்பாளர்களாக நியமித்து உத்தரவை அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என அறிவிக்க வேண்டும். உத்தரவை ரத்து செய்யவேண்டும்" என்று கூறியுள்ளார். இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது.

# வால்பாறை காவல்துறை ஆய்வாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்: சீமான்

சென்னை, ஜூலை25

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சி நிர்வாகத்தில் நடைபெற்றுள்ள சுமார் 80 கோடி ரூபாய் ஊழல் முறைகேடுகளைக் கண்டித்து, நாம் தமிழர் கட்சி சார்பாக காவல்துறையிடம் முறையான அனுமதி பெற்று, கடந்த 2072025 அன்று வால்பாறையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாம் தமிழர் கட்சியின் மீதான தனிப்பட்ட விருப்பு வெறுப்புக் காரணமாக வால்பாறை காவல் ஆய்வாளர் ஆனந்தன் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி தராமல் இழுத்தடித்த நிலையில், ஆனைமலை காவல்துறை துணை கண்காணிப்பாளர் மூலம் நேரடியாக அனுமதிப்பெற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இதனால் காழ்ப்புணர்ச்சி கொண்ட காவல் ஆய்வாளர் ஆனந்தன் வேண்டுமென்றே நாம் தமிழர் கட்சியினரை மிரட்டும் பணியில் ஈடுபட்டார்.

மேலும், நாம் தமிழர் கட்சியின் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதியளித்த அதே நேரத்தில், அதே இடத்தில் வேண்டுமென்றே, இந்து முன்னணியின் ஊர்வலத்திற்கும் அனுமதியளித்துக் கண்டன ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தைச் சிதறடிக்கும் செயலில் வால்பாறை காவல்துறை ஈடுபட்டது. காவல்துறையினரின் இத்தகைய எதேச்சதிகாரச் செயலினை நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்கள் நிகழ்விடத்திலேயே கண்டித்து உரையாற்றினர்.

நாம் தமிழர் கட்சியினர் மீது வழக்குத் தொடுக்க எவ்வித முகாந்திரமும் இல்லாத நிலையில், அவர்களைக் காவல் நிலையம் வரவழைத்து அடித்துத் துன்புறுத்தி அடிபணியவைக்கும் நோக்கத்தில் செயல்படும் தமிழ்நாடு காவல்துறையின் அடாவடிச்செயல் சட்டத்திற்குப் புறம்பானதாகும். தமிழ்நாட்டு காவல்துறையின் பெயர் ஏற்கனவே இந்திய அளவில் சீர்கெட்டுப்போயுள்ள நிலையில், சட்டம்ஒழுங்கைச் சீர் செய்வதற்குப் பதிலாக இதுபோன்ற முறைகேடான அத்துமீறலில் ஈடுபடுவது ஒட்டுமொத்த காவல்துறைக்கும் களங்கம் ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

ஆகவே, மக்கள் நலன் காக்கும் நாம் தமிழர் கட்சியின் அறப்போராட்டத்தை முடக்கி, சட்டத்திற்குப் புறம்பாகப் பொறுப்பாளர்களை மிரட்டும் செயலில் ஈடுபடும் வால்பாறை காவல்துறை ஆய்வாளர் மீது தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரவுடி கொலை வழக்கு: தூத்துக்குடியை சேர்ந்த 7 ரவுடிகள் கைது

சேலம், ஜூலை 25

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர் மதன்குமார் என்கிற அப்பு. பல்வேறு கொலை வழக்கில் தொடர்புடைய இவர் ரவுடியாக வலம் வந்த நிலையில் கொலை வழக்கு ஒன்றில் சேலம் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.



அதன்படி நாள்தோறும் சேலம் அஸ்தம்பட்டி காவல் நிலையத்திற்கு வந்து கையெழுத்து போட்டுள்ளார். வழக்கம்போல கடந்த 15ந்தேதி கையெழுத்திடுவதற்காக மனைவியுடன் வந்த மதன், ஓட்டல் ஒன்றில் சாப்பிடுவதற்காக உள்ளே புகுந்துள்ளார். அப்போது இரண்டு இருசக்கர வாகனங்களில் வந்த ஆறு பேர் கொண்ட கும்பல் உணவகத்திற்கு உள்ளே சென்று மதன்குமாரை மனைவி கண்முன்னே சரமாரியாக வெட்டி படுகொலை செய்தனர். சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் மதன்குமார் உயிரிழந்தார்.

உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் மதன்குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்த நிலையில் படுகொலை சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கொலை சம்பவத்தில் கொலை செய்தவர்கள் தப்பி ஓடும் சிசிடிவி காட்சிகள் வெளியாகி இருந்தது. அதை அடிப்படையாக வைத்து போலீசார் விசாரணை மேற்கொண்டு கொலை செய்துவிட்டு தப்பி திண்டுக்கல்லில் பதுங்கியிருந்த ஹரிபிரசாத், அந்தோணி, சந்தோஷ் ,சூர்யா உள்ளிட்ட நான்கு பேரை கைது செய்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இந்த சம்பவத்தில் தற்போது தூத்துக்குடியைச் சேர்ந்த மேலும் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட ஏழு பேரும் சேலம் அழைத்துவரப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கைது செய்யப்பட்டவர்கள் விவரம்: கிருஷ்ண காந்த், செல்வ பூபதி, வெற்றி (எ) விக்னேஷ், சின்னத்தம்பி, பிரவீன் ஷா, ரத்தினம் வர்ஷா, ராஜ்.

# அதிமுகவை பாஜக விழுங்கி விடும்: திருமாவளவன் பேட்டி

சென்னை, ஜூலை 25

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

அதிமுகவை பாஜக விழுங்கி சரித்துவிடும் என்று திரும்ப திரும்ப விடுதலை சிறுத்தைகள் கட்சி பொறுப்புணர்வோடு சுட்டிக் காட்டியது. கவலையோடு சுட்டிக்காட்டியது. அதிமுக பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு சுட்டிக்காட்டியது. ஆனால், அதை அப்படியே திருப்பி விடுதலை சிறுத்தைகள் கட்சியை திமுக விழுங்கிவிடும் என்று முன்னாள் முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி சொல்லி இருக்கிறார்.

அவருக்கு இப்படி எல்லாம் பேச வேண்டும் என்று யாரோ சொல்லித் தருகிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். அவராகவே இந்த கருத்தை சொல்கிறார் என்று என்னால் ஏற்க முடியவில்லை. அதிமுகவிற்கு எதிராக பேசுவதாக அவர் கருதுகிறார் என்று நினைக்கிறேன். அதிமுக தொண்டர்கள் நான் எதற்காக சொல்கிறேன் என்று அவர்கள் புரிந்துக்கொள்வார்கள். எடப்பாடி பழனிசாமியும் உணருவார். ஆனால், சேராத இடத்தில் சேர்ந்திருக்கின்ற சூழலில் அவர் இப்படி எல்லாம் பேசுகிறார் என்று நான் கருதுகிறேன்.



அப்படி பேசினால் வருத்தப்படுவதற்கும் எதுவுமில்லை. 2021ம் ஆண்டில் இருந்து ஓரிரு பொதுத் தேர்தலைத் தவிர மற்ற அனைத்து தேர்தல்களிலும் திமுக கூட்டணியில் தான் விசிக பயணிக்கிறது. மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்து இன்று ஒரு மாநில கட்சியாக உருவாகி இருக்கிறது. அங்கீகாரம் பெற்றிருக்கிறது. விசிக வளர்ச்சி அடைந்திருக்கிறதே தவிர.. வீழ்ச்சி அடையவில்லை. ஆகவே அவர், திரித்துப் பேசுவதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை மாநகராட்சியில் 6 மாதங்களில் 2 லட்சம் மெட்ரிக் டன் கட்டிட இடிபாட்டு கழிவுகள் அகற்றம்

சென்னை, ஜூலை 25

பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 6 மாதங்களில் 2 லட்சம் மெட்ரிக் டன் கட்டிட இடிபாட்டு கழிவுகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் திருவாளர் பிரிமீயர் பிரிசிசன் சர்ஃபேஸ் (M/s. Premier Precision Surface) நிறுவனத்தின் மூலம் அகற்றப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் சார்பில் கட்டிடம் மற்றும் இடிபாட்டுக்கழிவுகள் அகற்றும் பணியானது 7 மண்டலங்களில் மட்டும் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் நீதிமன்ற வழக்கின் காரணமாக இப்பணிகளை மேற்கொள்வதில் பெரிதும் இடர்பாடு ஏற்பட்டது.

இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் கட்டிடம் மற்றும் இடிபாட்டுக்கழிவுகள் சீராக அகற்றப்படாமல் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியும் சுகாதார சீர்கேடு, விபத்துகள் ஏற்படுதல், வளர்ச்சிப் பணிகளில் தடங்கல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டன. இந்நிலையில், இப்பணிகளை மேற்கொள்வதில் உரிய தீர்வுகண்டு அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் செம்மைப் படுத்தப்பட்டு இப்பணிகள் கடந்த 07.01.2025 ஆம் நாளன்று மேயரால் தீவிர கட்டிடக் கழிவுகள் அகற்றும் பணி தண்டையார் பேட்டை, ராயபுரம், திரு.வி.க. நகர், அண்ணாநகர், தேனாம் பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டது.



இதனைத் தொடர்ந்து, 17.01.2025 முதல் திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 8 மண்டலங்கள் உட்பட 15 மண்டலங்களிலும் தீவிரமாக கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளுக்காக 15 மண்டலங்களிலும் டிப்பர் வாகனங்கள், பாப்காட் வாகனங்கள், ஜே.சி.பி. வானகங்கள், டாடா ஏஸ் வாகனங்கள், டிப்பர் லாரிகள், உள்ளிட்ட 168 வாகனங்களைப் பயன்படுத்தி சராசரியாக நாளொன்றுக்கு 1000 மெட்ரிக் டன் கட்டடக் கழிவுகள் அகற்றப்படுகின்றன.

கடந்த 07.01.2025 முதல் 22.07.2025 வரை 2 லட்சம் மெட்ரிக் டன் கட்டிட இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தக் கட்டிடம் மற்றும் கழிவுகள் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் உள்ள கட்டிடக் கழிவுகள் பிரித்தெடுக்கும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு தனித்தனியாக பிரித்து மறுசுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் அனைத்துப் பகுதிகளையும் வாரத்தில் மூன்று முறை ஆய்வு செய்து, அவ்விடங்களில் உள்ள கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை ஒப்பமுறைப்படி அகற்றவும், சாலைகளின் தூய்மையைப் பராமரிக்கும் விதமாக மாநகராட்சி அலுவலர்கள், திட்ட மேலாண்மைப் பணியாளர்கள் (PMC) மற்றும் ஒப்பந்ததாரர் மேற்பார்வையாளர்கள் கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளின்இருப்பிடத்தை தெரிவிக்க பெருநகர சென்னை மாநகராட்சியில் செயலி (app) வடிவமைக்கப்பட்டு, அதன் மூலம் கட்டுமானக்கழிவுகளின் இருப்பிடங்கள் தெரிவிக்கப்பட்டு உரிய ஒப்புதல் பெற்ற பின் ஒப்பந்ததாரர் கழிவுகளை அகற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. கழிவுகள் அகற்றப்பட்ட பின்னரும் அதனை புகைப்படம் எடுத்து பதிவேற்றம் செய்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கட்டிடம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றுவது தொடர்பாக பொதுமக்களுக்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள் 21.04.2025 முதல் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இது குறித்து அலுவலர்களுக்கும் கருத்துப்பட்டறை மற்றும் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக சாலைகளிலும், தெருக்களிலும், குடியிருப்புப் பகுதிகளிலும், வணிக வளாகப்பகுதிகளிலும் கட்டிடக் கழிவுகள் கொட்டப்பட்டு நீண்டநாட்களாக அகற்றப்படாமல் இருப்பது முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளது.

வழிகாட்டுதல் நெறிமுறைகள் பின்பற்றாதவர்களிடமிருந்து ஜனவரி2025 முதல் 22.07.2025 வரை 39.30 லட்சம் ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் கட்டிட இடிபாட்டுக் கழிவுகள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்திலும் (https://chennaicorporation.gov.in/gcc/CandD_Waste_Management/), மாநகராட்சியின் 1913 என்ற உதவி எண்ணிலும் தொடர்பு கொண்டும் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருநெல்வேலியில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம்

திருநெல்வேலி ஜூலை 25

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்திற்கான மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்டம் தியாகராஜநகரில் உள்ள மேற்பார்வை பொறியாளர்அலுவலகத்தில் இன்று காலை முதல் மதியம் வரை நடைபெற்றது. இந்த மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் ஏற்கெனவே புகார் கொடுத்த மின் நுகர்வோர்கள் கலந்து கொண்டனர். மனுதாரர்களின் புகார் மீது விசாரணை நடைபெற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.



மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் தலைவராக திருநெல்வேலி மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அகிலாண்டேஸ்வரி மற்றும் மன்ற உறுப்பினர்களான வழக்கறிஞர்கள் தவசிராஜன், சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கோட்ட செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் (பொது) வெங்கடேஷ்மணி, உதவி செயற்பொறியாளர் (மக்கள் தொடர்பு அலுவலர்) சங்கர், உதவி மின் பொறியாளர் ஜெபஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருநெல்வேலி ஊர்க்காவல் படையில் 15 பேருக்கு பணி: 31ம் தேதிக்குள் மீனவ இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

திருநெல்வேலி ஜூலை 25

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் மற்றும் உவரி கடலோர பாதுகாப்பு காவல் படையினருடன் இணைந்து பணி புரிய 15 மீனவ இளைஞர்கள் திருநெல்வேலி மாவட்ட ஊர்காவல்படை பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். ஊர்காவல் படையில் சேர்ந்து சேவை செய்ய விரும்பும் ஆண்கள் 18 வயது முடிந்தவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும், நல்ல உடல் தகுதியுடன் இருத்தல் வேண்டும்.

குறைந்தபட்ச கல்வி தகுதி (பத்தாம்) 10ம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் ஊர்காவல் படை காவலர்களுக்கு காவல் துறையினரால் 45 வேலை நாட்கள் அடிப்படை பயிற்சி வழங்கப்படும். அதன் பின்னர் சேவை புரியும் காலத்தில் அழைப்பு பணி ஒன்றுக்கு ரூ.280 மட்டுமே சன்மானமாக வழங்கப்படும். (அதிகபட்சமாக மாதத்திற்கு 10 அழைப்பு பணிகள் மட்டும்) இப்பிரிவில் வேலை செய்ய விருப்பமுள்ளவர்கள் பயோடேட்டா, கல்வி மற்றும் வயது சான்றின் நகல்கள், 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் சுய முகவரி குறிப்பிட்ட அஞ்சல்அட்டையுடன்விருப்ப மனுவினையும் 31.7.2025ம் தேதிக்குள் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, ஆயுதப்படை துணை காவல் கண்காணிப்பாளர் (டி.எஸ்.பி.) அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அரசுப்பள்ளிகளை தேடி வரக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்: ஜி.கே.வாசன்



சென்னை, ஜூலை 25

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தமிழக அரசு – அரசுப் பள்ளிக்கட்டிடங்களின் தரத்தை மேம்படுத்த செலவு செய்ய வேண்டுமே தவிர பள்ளிக்கட்டிடங்கள் தரமற்றதாக இருக்க செலவு செய்யக்கூடாது. ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அருகே உள்ள கூகலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கட்டிடத்தின் மேற்கூரை கடந்த 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இடிந்து விழுந்தது.

விடுமுறை நாள் என்பதால் மாணவர்களும், ஆசிரியர்களும் விடுப்பில் இருந்த காரணத்தால் அவர்கள் இந்த இடிபாடுகளில் சிக்கவில்லை. இந்த பள்ளிக்கட்டிடம் கடந்த 2024ம் ஆண்டு ஜூலை மாதம் தமிழக முதல்அமைச்சரால் திறக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் அமைச்சரால் திறக்கப்பட்டு ஓராண்டே ஆன பள்ளிக்கட்டிடமே உறுதியற்ற நிலையில் இருப்பது அரசின் செயலற்ற ஆட்சியை வெளிப்படுத்துகிறது. அரசின் பள்ளிக்கட்டிடங்களை யார் கட்டினாலும், முதல் அமைச்சர் மட்டுமல்ல யார் திறந்தாலும் திறக்காவிட்டாலும் கட்டிடங்களின் தரமானது ஒதுக்கிய மதிப்பீட்டிற்கு ஏற்ப சற்றும் குறையாமல் இருக்க வேண்டும். அதை விடுத்து ஒதுக்கிய மதிப்பீட்டில் லஞ்சம், ஊழல் என கணக்கிட்டு கட்டிட வேலைப் பார்த்தால் தரம் இருக்காது. இப்படித்தான் தமிழ்நாட்டில் அரசாங்கத்தால் எந்த ஒரு திட்டத்திற்கும் ஒதுக்கப்படும் நிதி, மதிப்பீட்டுத் தொகையானது முழுமையாக செலவிடப்படாமல் விரயமாகி, மக்களுக்கு உரிய பலன்கள் முழுமையாக கிடைக்கவில்லை. அரசுப்பள்ளிகளில் மாணவ, மாணவிகளை அதிக எண்ணிக்கையில் சேர்க்க ஏதேனும் ஆக்கப்பூர்வமாக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த நாம் கோரிக்கை வைத்தால் அதை விடுத்து இருக்கும் பள்ளிக்கட்டிடங்களின் தரத்தை குறைக்கும் வகையில் செயல்படுவது தான் இன்றைய தமிழக தி.மு.க அரசின் அவலநிலை. தமிழக அரசே – கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக எங்கெல்லாம் அரசின் பள்ளிகளில் கட்டிடங்களின் தரத்தை மேம்படுத்த அல்லது புதிய கட்டிடங்கள் கட்ட செலவிடப்பட்டதோ அதெல்லாம் முறையாக செலவிடப்பட்டதா என ஆய்வு செய்து, அனைத்து அரசுப்பள்ளிக் கட்டிடங்களின் தரத்தை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

அரசுப்பள்ளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பள்ளி சம்பந்தப்பட்ட எந்த ஒரு பணியிலும் நேர்மையும், வெளிப்படைத் தன்மையும், தரமும் இருப்பதற்கு எவ்வித சமரசமும் குறுக்கீடாக இருக்கக்கூடாது. அரசு தனியார் பள்ளிகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட அதிக முக்கியத்துவத்தை அரசுப்பள்ளிகளுக்கு கொடுக்க வேண்டும். காரணம் சாதாரண ஏழை, எளிய, நடுத்தர குடும்பத்தினரின் பிள்ளைகள் தான் அரசுப்பள்ளிகளை நாடி வருகிறார்கள்.

தமிழக அரசு – தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க, பள்ளிக்கட்டிடங்களின் தரத்தை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகளை அவ்வப்போதே எடுத்து அனைத்து தரப்பு குடும்பத்தினரின் பிள்ளைகளும் அரசுப்பள்ளிகளை தேடி வரக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை மத்திய கைலாஷ் சந்திப்பில் மேம்பாலப் பணிகள் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு




சென்னை, ஜூலை 25

சென்னை மத்திய கைலாஷ் சந்திப்பில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகளை, தமிழக அரசின் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"சென்னை, சர்தார் பட்டேல் சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில், சர்தார் பட்டேல் சாலையையும் ராஜீவ் காந்தி சாலையையும் இணைக்கும் வகையில், மத்திய கைலாஷ் சந்திப்பில் அமைக்கப்பட்டு வரும் "L" வடிவ மேம்பால பணிகளை, இன்று (23.7.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில், மேம்பாலப் பணிகளை விரைவுபடுத்தி, 2025 அக்டோபர் 31ஆம் தேதிக்குள் முடிக்கும்படி, அமைச்சர் உத்தரவிட்டார்.

மேலும், சர்தார் பட்டேல் சாலையில், காந்தி மண்டபம் சாலை முதல் ஜி.எஸ்.டி. சாலை வரை, IIT, அண்ணா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் போன்ற முக்கிய கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் இருப்பதால், அந்தப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில், தற்போதைய நான்கு வழித்தட சாலையை, ஆறு வழித்தடமாக விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும்படி அலுவலர்களுக்கு அமைச்சர் ஆணையிட்டார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு) கு.கோ.சத்தியபிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் ரா.சந்திரசேகர், சென்னை பெருநகர கண்காணிப்புப் பொறியாளர் ச.ஜவஹர் முத்துராஜ், சென்னை கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம், கோட்ட பொறியாளர் பி.சந்திரசேகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாமக்கல் கிட்னி விற்பனை விவகாரம்: மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை




சென்னை, ஜூலை 25

கிட்னி விற்பனை விவகாரம் தொடர்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை செய்திகளில் வரப்பெற்ற முறைகேடான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை குறித்து விசாரித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் .எஸ்.வினீதை, நியமித்து 18.07.2025 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் எஸ்.வினீத், மீனாட்சிசுந்தரி, இணை இயக்குநர் (சட்டம்), மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம், சென்னை, ராஜ்மோகன், இணை இயக்குநர் நலப்பணிகள் நாமக்கல், கே. மாரிமுத்து, இணை இயக்குநர் நலப்பணிகள் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டம், சீத்தாராமன், காவல் துணை கண்காணிப்பாளர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை ஆகியோர் அடங்கிய குழு தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரிவான விசாரணை மேற்கொண்டனர்.

இவ்விசாரணையின் அடிப்படையில் முதற்கட்ட விசாரணை அறிக்கையினை எஸ்.வினீத், அரசுக்கு அனுப்பியுள்ளார். அந்த முதற்கட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி ஆகிய மருத்துவமனைகளுக்கு மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994 பிரிவு 16 உட்பிரிவு (2) ன்படி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள வழங்கப்பட்ட உரிமம் பொதுமக்கள் நலன் கருதி தற்காலிகமாக நிறுத்தி வைக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரம்பலூரில் பட்டியலின மக்களின் தெருவில் தேர் செல்லவேண்டும்: சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜூலை25


பெரம்பலூர் மாவட்டம், வேப்பன்தட்டை கிராமத்தில் உள்ள ஶ்ரீவேத மாரியம்மன் கோவிலின் தேர் பட்டியலின மக்கள் வசிக்கும் பகுதியில் வருவதற்கு மற்றொரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறி, அந்த கிராமத்தை சேர்ந்த வினோத்குமார் மற்றும் மணிவண்ணன் ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவில், பட்டியலின மக்கள் வசிக்கும் தெருக்களில் தேர் வருவதை உறுதி செய்ய மாவட்ட கலெக்டர், எஸ்.பிக்கு ஆகியோருக்கு உத்தரவிட வேண்டுமென மனுவில் கோரிக்கைவைத்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த கோர்ட்டு, குறிப்பிட்ட தெருவுக்குள் தேர் செல்ல முடியுமா? சாலையின் அகலம், தேரின் நீள, அகலம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி பெரம்பலூர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு தலைவருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த மனு, நீதிபதி பி. வேல்முருகன் முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு தலைவர் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், குறிப்பிட்ட தெருக்களில், எந்த இடையூறும் இல்லாமல் தேர் செல்ல முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதை பதிவு செய்த நீதிபதி, கோவிலில் திருவிழா நடக்கும் போது, பட்டியலின மக்கள் வசிக்கும் தெருக்களின் வழியே தேர் செல்ல வேண்டும் எனவும், அதற்கு தேவையான பாதுகாப்பை போலீசார் வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

# கள்ளக்காதலனோடு சேர்ந்து கணவரை கொன்ற மனைவி கைது



சென்னை, ஜூலை 25

சென்னை பெரும்பாக்கம் நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு அருகே பஸ் நிறுத்தத்தில் தலையில் கல்லால் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் ஒருவரின் உடல் கடந்த 19ம் தேதி மீட்கப்பட்டது. அவரது உடலை கைப்பற்றி போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது அவரது பெயர் பழனிசாமி என்பதும், அவர் தனது மனைவியால் கொலை செய்யப்பட்டு இருப்பதும் தெரியவந்துள்ளது. இது பற்றிய விவரம் வருமாறு:

கொலை செய்யப்பட்ட பழனிச்சாமி கணவனை இழந்த வீரலட்சுமி என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி வந்துள்ளார். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர்.

வீடுகளுக்கு சிலிண்டர் போடும் வேலை செய்து வந்த பழனிச்சாமி உறவுக்கார பெண் ஒருவரை 2வதாக திருமணம் செய்துள்ளார். அதனை தொடர்ந்து அவர் பிரிந்து சென்று விட்டதாக கூறப்படுகிறது. இந்தநிலையில், முதல் மனைவி வீரலட்சுமிக்கு அசோக்குமார் என்பவருடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த பழனிசாமி இது பற்றி வீரலட்சுமியிடம் கேட்டு தகராறு செய்துள்ளார். இது தொடர்பாக இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் பழனிசாமி மனைவி வீரலட்சுமியை கடுமையாக தாக்கி உள்ளார். இதுபற்றி வீரலட்சுமி தனது கள்ளக்காதலனான அசோக்குமாரிடம் முறையிட்டுள்ளார். இதை தொடர்ந்து அசோக்குமார் உனது கணவனை வீட்டை விட்டு வெளியேற்றி விடு நான் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

இதன்படி வீரலட்சுமி கணவர் பழனிசாமியிடன் சண்டை போட்டு வீட்டை விட்டு வெளியேற்றி உள்லார். இதனால் பழனிச்சாமி வெளியிலேயே படுத்து தூங்கி இருக்கிறார். இந்தநிலையில் பெரும்பாக்கம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு குடியிருப்பு அருகே தூங்கிக்கொண்டிருந்த பழனிசாமியை அசோக்குமார் கல்லால் அடித்து கொலை செய்திருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதைதொடர்ந்து அசோக்குமார், வீரலட்சுமி ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

# கொலை வழக்கு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை



தூத்துக்குடி ஜூலை 25

கடந்த 2019ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், புதூர் மெயின்ரோடு அருகேவைத்துவிருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையைச் சேர்ந்த பால்பாண்டியன் மகன் வடிவேல்முருகன் (வயது 40) என்பவரை குடும்ப பிரச்சினை காரணமாக அவரது உறவினரான விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரைச் சேர்ந்த ராஜமாணிக்கம் மகன் அற்புதசெல்வம்(எ) ஆஸ்வின்(33) என்பவர் கத்தியால் தாக்கி கொலை செய்த வழக்கில் புதூர் காவல் நிலைய போலீசார் அற்புதசெல்வம்(எ) ஆஸ்வினை கைது செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம்II ல் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி பீரித்தா இன்று குற்றவாளி அற்புதசெல்வம்(எ) ஆஸ்வினுக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.5,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய புதூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் நாகலட்சுமி, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் சேவியர் ஞானப்பிரகாசம், விசாரணைக்கு உதவியாக இருந்த காவலர் முனியசாமி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

# திருநெல்வேலியில் குடும்ப தகராறில் தங்கையின் கணவர் கொலை: 2 பேருக்கு ஆயுள் தண்டனை



திருநெல்வேலி ஜூலை 25

திருநெல்வேலி மாவட்டம், இட்டமொழி கிராமத்தில் கடந்த 2015ம் ஆண்டு குடுப்ப தகராறினால், மனைவியின் சகோதரர் மற்றும் உறவினர் ஒருவர் சேர்ந்து துரைசிங் (வயது 27) என்பவரை கொலை செய்த வழக்கில் இன்று திருநெல்வேலி நான்காவது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி கதிரவன் தீர்ப்பு வழங்கினார்.

திருநெல்வேலி நீதிமன்றத்தில் இவ்வழக்கின் விசாரணை நடைபெற்று வந்த நிலையில் இன்று வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான இட்டமொழியைச் சேர்ந்த முத்துக்குமரன்(31) மற்றும் மணப்பாடு பகுதியைச் சேர்ந்த குமார்(எ) முத்துக்குமார்(40) ஆகிய 2 பேர் மீதான குற்றம் நிருபிக்கப்பட்டு முதலாவது குற்றவாளியான முத்துக்குமரனுக்கு ஆயுள் தண்டனை, ரூ.4,000 அபராதம் மற்றும் 2வது குற்றவாளியான குமாருக்கு ஆயுள் தண்டனை, ரூ.5,000 அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில் திறம்பட சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த வள்ளியூர் உட்கோட்ட டி.எஸ்.பி. வெங்கடேஷ், இன்ஸ்பெக்டர் சீதாலட்சுமி மற்றும் திசையன்விளை காவல் நிலைய காவல் அதிகாரிகள், காவலர்கள், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்குரைஞர் காளிமுத்து ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

2025ம் ஆண்டில் இதுவரை 15 கொலை வழக்குகளில் குற்றம் நிருபிக்கப்பட்டு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதில் ஒரு நபருக்கு மரண தண்டனையும், 54 நபர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன தண்டனை பெற்றவர்களில் 14 பேர் சரித்திர பதிவேடு உடைய குற்றவாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் சாட்சிகளை ஆஜர்படுத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரும் முனைப்பில் தொடர்ந்து உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது என மாவட்ட காவல் துறை தெரிவித்துள்ளது.

# குரூப் 4 தேர்வர்களை பலியாக்குவதில் நியாயமில்லை: அண்ணாமலை



சென்னை, ஜூலை 25

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

டி.என்.பி.எஸ்.சி குரூப் 4 தேர்வில், மொத்தம் 200 கேள்விகளில், தமிழ்ப் பாடத்திற்கு மட்டும் 100 கேள்விகள் உள்ளன. கடந்த 12.07.2025, சனிக்கிழமை அன்று நடைபெற்ற தேர்வில், தமிழ்ப் பாடத்தில் கேட்கப்பட்ட 100 கேள்விகளில், சுமார் 50க்கும் மேற்பட்ட கேள்விகள், பாடத்திட்டத்தில் இல்லாத, கேள்விகளே புரியாத வண்ணம், மிகவும் சிக்கலான கேள்விகளாகக் கேட்கப்பட்டுள்ளன என, தேர்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிர்மறை மதிப்பெண் இல்லை என்பதால், அனைத்துத் தேர்வாளர்களும், ஏதோ ஒரு விடையை தேர்வு செய்திருக்கிறார்கள்.

இதனால் தேர்வுக்குக் கடினமாக உழைத்துத் தயாரானவர்களும், இறுதியில் அதிர்ஷ்டம் இருந்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அரசு வேலைக்குத் தங்கள் நேரத்தையும், கடின உழைப்பையும் கொடுத்துப் பாடுபட்ட இளைஞர்கள், இறுதியில், பாடத்திட்டத்தில் இல்லாத கேள்விகளால், தங்கள் வாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பது வருத்தத்துக்குரியது மட்டுமின்றி, தவிர்க்கப்பட வேண்டியதும் கூட.

அரசு வேலை என்ற கனவுகளோடு தேர்வுக்குத் தயாரான இளைஞர்களையும், அவர்களது குடும்பத்தினரையும், பாடத்திட்டத்தில் இல்லாத கேள்விகளைக் கேட்டு, யாரோ செய்த தவறுக்காகப் பலியாக்குவதில் நியாயமில்லை. எனவே, தமிழக அரசு, கடந்த சனிக்கிழமை நடைபெற்ற டி.என்.பி.எஸ்.சி குரூப் 4, தமிழ்ப் பாடத்துக்கான தேர்வை ரத்து செய்து மறு தேர்வு நடத்த வேண்டும். அல்லது, பாடத்திட்டத்தில் இல்லாத கேள்விகளுக்கான மதிப்பெண்களை, அனைத்து மாணவர்களுக்கும் சமமாக வழங்க வேண்டும் அல்லது, ஒட்டுமொத்தமாக அந்தக் கேள்விகளை நீக்கி, மதிப்பெண் கணக்கிட வேண்டும் என்றும், மீண்டும் இது போன்ற பாடத்திடத்தில் இல்லாத கேள்விகள் தேர்வில் கேட்கப்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

25.7.2025

# மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு அரசு பள்ளி ஆசிரியர் கைது

கிருஷ்ணகிரி ஜூலை 25

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி பகுதியில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றி வருபவர் பாலகிருஷ்ணன் (50 வயது).

கடந்த சில வாரங்களுக்கு முன்பு அதே பள்ளியில் 7, 8ம் வகுப்பு மாணவிகள் 3 பேருக்கு ஆசிரியர் பாலகிருஷ்ணன் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து மாணவிகள் தரப்பில் கல்வித்துறை அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

கலெக்டர் தினேஷ்குமார் உத்தரவின் பேரில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், வட்டாரகல்வி அலுவலர் நேற்று சம்பந்தப்பட்ட பள்ளிக்கு சென்று விசாரணை நடத்தினர். இதில் மாணவிகளுக்கு ஆசிரியர் பாலியல் தொந்தரவு கொடுத்தது தெரிய வந்தது.

இதுதொடர்பாக கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தி ஆசிரியர் பாலகிருஷ்ணனை நேற்று மாலை கைது செய்தனர். அவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# செல்போன் பார்த்ததை கண்டித்த தாய்: 10ம் வகுப்பு மாணவி எடுத்த விபரீத முடிவு



தேனி ஜூலை 25

தேனி மாவட்டம் காமயகவுண்டம்பட்டி, கருமாரிபுரத்தை சேர்ந்தவர் சங்கிலி (56 வயது). கட்டிட தொழிலாளி. இவரது மனைவி ஈஸ்வரி. இவர், தனது வீட்டின் அருகில் மளிகை கடை நடத்தி வருகிறார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். இதில், 2வது மகள் மதுமிதா (14 வயது). இவர், ராயப்பன்பட்டியில் உள்ள ஒரு பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பள்ளி முடிந்ததும் வீட்டுக்கு வந்த மதுமிதா, படிக்காமல் செல்போன் பார்த்துகொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

இதனை பார்த்த அவரது தாய், செல்போன் பார்ப்பதை நிறுத்திவிட்டு படிக்குமாறு கண்டித்தார். இதனால் மனமுடைந்த மதுமிதா தற்கொலை செய்ய முடிவு செய்தார். அதன்படி, நள்ளிரவில் பெற்றோர் தூங்கியதும், வீட்டின் ஒரு அறையில் மின்விசிறியில் கயிற்றால் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார்.


# சென்னை: 7வது மாடியில் இருந்து குதித்து கல்லூரி மாணவர் தற்கொலை

சென்னை ஜூலை 25

சென்னை ராயப்பேட்டை மாசில்லாமணி தெருவில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் ஆதித்யா சச்சின். இவர் கேளம்பாக்கத்தில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பி.காம். பட்டப்படிப்பு படித்து வந்தார். இவருடைய தந்தை அண்ணாசாலையில் உதிரி பாகங்கள் விற்கும் கடையை நடத்தி வருகிறார். சச்சின் சில நாட்களாக மன அழுத்தத்தில் இருந்து வந்ததாக தெரிகிறது. மேலும் இதற்காக சிகிச்சையும் எடுத்து வந்துள்ளார். இந்த நிலையில், நேற்று கல்லூரி முடிந்து வீடு திரும்பிய சச்சின், அவர் வசிக்கும் அடுக்கு மாடி குடியிருப்பில் உள்ள 7வது மாடிக்கு யோகாசனம் செய்ய சென்றார். அப்போது திடீரென அங்கிருந்து கீழே குதித்துவிட்டார். இதில் பலத்த காயமடைந்த அவர் அங்கேயே ரத்த வெள்ளத்தில் பலியானார்.

தகவல்அறிந்துவிரைந்து வந்த ராயப்பேட்டை போலீசார், உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தற்கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# ரூ.3.24 கோடி வழிப்பறி திருவாரூர் பாஜக நிர்வாகி கைது



திருவாரூர், ஜூலை 25

கேரளாவில் ரூ.3.24 கோடி வழிப்பறி வழக்கில் திருவாரூர் பாஜக நிர்வாகியை கேரள போலீசார் கைது செய்துள்ளனர். ஆலப்புழாவில் நகை கடை உரிமையாளரிடம் ரூ.3.24 கோடி வழிப்பறி செய்த வழக்கில் திருவாரூர் பாஜக நிர்வாகி ஸ்ரீராம் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த சுபாஷ் சந்திர போஸ், திருக்குமார் உள்ளிட்ட 7 பேரையும் கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பிறப்பு சான்றிதழில் பெயரை திருத்த ரூ.5 ஆயிரம் லஞ்சம் ; பெண் தாசில்தார் கைது



தரகம்பட்டி, ஜூலை 25

ஈரோடு மாவட்டம் திங்களூர் பகுதியில்வசிப்பவர்வேல்முருகன் மனைவி ரேவதி. இவரது சொந்த ஊர் கரூர் மாவட்டம், கடவூர் அருகே உள்ள வீரணம்பட்டி ஆகும். இவரது மகள் பவித்ரா தற்போது கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இந்நிலையில் பவித்ராவின் பிறப்பு சான்றிதழில் பவித்ரா என்பதற்கு பதிலாக பௌத்ரா என்று இருந்துள்ளது. ஆனால் பள்ளி சான்றுகள், ஆதார் மற்றும் குடும்ப அட்டை உள்ளிட்ட ஆவணங்களில் பவித்ரா என்று சரியாக இருக்கிறது.

இந்த நிலையில் பிறப்பு சான்றிதழில் தனது மகளின் பெயர் தவறாக இருப்பதால் பிற்காலத்தில் பிரச்சினை வரும் என கருதிய ரேவதி, கடவூர் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று பெயர் திருத்தம் செய்வதற்காக கடந்த 1½ ஆண்டுகளாக முயற்சி செய்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடவூர் தாசில்தார் சவுந்தரவல்லியை நேரடியாக சந்தித்து தனது மகளின் பிறப்பு சான்றிதழில் பெயரில் உள்ள எழுத்து பிழையினை திருத்தம் செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பெற்றுக்கொண்ட தாசில்தார் சவுந்தரவல்லி, பெயரில் உள்ள எழுத்துப்பிழையினை சரிசெய்வதற்கு ரூ.5 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார்.

ஆனால்லஞ்சம்கொடுக்கவிரும்பாதரேவதி இதுகுறித்து கரூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில்லஞ்சஒழிப்புபோலீசார்ரேவதியிடம்ரசாயன பொடி தடவிய ரூ.5 ஆயிரத்தை கொடுத்து சவுந்தரவல்லியிடம் கொடுக்க கூறினர். அதன்படி நேற்று மதியம் ரேவதி, லஞ்ச பணத்தை சவுந்தரவல்லியிடம் கொடுத்தார். அதனை வாங்கியபோது சவுந்தரவல்லியை அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும், களவுமாக பிடித்து கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# இன்றைய ராசி பலன்கள் (25.7.2025)

மேஷம்: திட்டமிட்டபணிகள்வெற்றிகரமாக நிறைவேறும். வீண் செலவுகள் குறையும். பரிகாரம்: செவ்வாயிற்கு அர்ச்சனை செய்யவும்.

ரிஷபம்: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை. வருமானத்தில் உயர்வு ஏற்படும். பரிகாரம்: தாயாரை தரிசனம் செய்யுங்கள்.

மிதுனம்: புதிய பொறுப்புகள் கிடைக்கும். சில்லறை சண்டைகளை தவிர்க்க வேண்டும். பரிகாரம்: விநாயகர் பூஜை செய்யுங்கள்.

கடகம்: மனதில்இருந்தகவலைகள்நீங்கும். உறவினர்கள் ஆதரவு அதி கரிக்கும். பரிகாரம்: தண்ணீர் புனித மாக பரிசுத்த இடத்தில் ஊற்றுங்கள்.

சிம்மம்: தொழிலில் புதிய வாய்ப்புகள். சிறு இடையூறுகள் வந்தாலும் நீங்கும். பரிகாரம்: சூரியனுக்கு ஜபம் செய்யவும்.

கன்னி: பயணங்கள் சாதகமாக அமையும். வழக்கு சம்பந்தமான விஷயங்களில் முன்னேற்றம். பரிகாரம்: நவகிரஹ பூஜை செய்து வாருங்கள்.

துலாம்: பழைய கடன்கள்திரும்ப கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். பரிகாரம்: சந்திரனுக்கு பால் அபிஷேகம் செய்யவும்.

விருச்சிகம்: வியாபாரத்தில் லாபம். உற்சாகமான நாள். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். பரிகாரம்: சனி பகவானை வணங்கவும்.

தனுசு: புதிய முயற்சிகள் வெற்றி பெறும். பண வரவு இருக்கும். பரிகாரம்: துர்கை அம்மனை வழிபடுங்கள்.

மகரம்: வீட்டில் நற்செய்தி. மனச்சாந்தி ஏற்படும். கொடுத்த உதவிக்கு மதிப்பு கிடைக்கும். பரிகாரம்: நந்தி தேவனை வழிபடுங்கள்.

கும்பம்: தொழில் வளர்ச்சி, ஆனந்த நாள். நண்பர்களின் துணை கிடைக்கும். பரிகாரம்: துளசி அருகே விளக்கு ஏற்றுங்கள்.

மீனம்: கடின உழைப்பால் வெற்றி. ஆரோக்கியம் மேம்படும். பரிகாரம்: குருவுக்கு பூஜை செய்யவும்.

# தூத்துக்குடியில் பைக்குகள் மோதிய விபத்தில் பெண் சாவு

தூத்துக்குடி ஜூலை 25

தென்காசி மாவட்டம், சாயமலை சிதம்பரபுரத்தைச் சேர்ந்தவர் முருகன். இவரது மனைவி வள்ளியம்மாள் (வயது 56). இவர்கள் நேற்று முன்தினம் காலையில் கட்டாலங்குளம் கிராமத்தில் நடந்த உறவினர் வீட்டு பூப்புனித நீராட்டு விழாவிற்கு மோட்டார் பைக்கில் சென்றனர். அந்தநிகழ்ச்சி முடிந்து மாலையில் மீண்டும் கட்டாலங்குளத்தில் இருந்து சிதம்பரபுரத்திற்கு மோட்டார் பைக்கில் 2 பேரும் திரும்பிச் சென்று கொண்டிருந்தனர்.

செட்டிகுறிச்சி அருகே சென்று கொண்டிருந்தபோது, எதிரே வடக்கு கோனார்கோட்டை கிராமத்திலிருந்து செட்டிகுறிச்சியை நோக்கி குற்றாலிங்கம் என்பவர் மற்றொரு மோட்டார் பைக்கில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது திடீரென 2 பைக்குகளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் 3 பேரும் மோட்டார் பைக்குகளில் இருந்துசாலையில்தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர். இதில் 3 பேரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு மற்ற 2 பேருக்கும் லேசான காயத்துக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதில் பலத்த காயமடைந்த வள்ளியம்மாளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இறந்த வள்ளியம்மாளுக்கு 3 மகன்கள் உள்ளனர். இதுகுறித்து கயத்தாறு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# "கிளாடியேட்டர்" இயக்குனருடன் இணைந்த 'தி பைரேட்ஸ் ஆப் தி கரீபியன்' நட்சத்திரம்



'தி பைரேட்ஸ் ஆப் தி கரீபியன்' நட்சத்திரம் ஜானி டெப் "ஹைட்" என்ற புதிய படத்தில் கையெழுத்திட்டுள்ளார். இது ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சனின் 'ஸ்ட்ரேஞ்ச் கேஸ் ஆப் டாக்டர் ஜெகில் அண்ட் மிஸ்டர் ஹைட்' நாவலை அடிப்படையாகக் கொண்டது என்று கூறப்படுகிறது.

இந்த படத்தை கிளாடியேட்டர் படங்களை இயக்கிய ரிட்லி ஸ்காட் இயக்குகிறார்.

பிரபல ஹாலிவுட் நடிகர் ஜானி டெப். இவர் கடந்த 2003ம் ஆண்டு வெளியான உலகப்புகழ் பெற்ற 'தி பைரேட்ஸ் ஆப் தி கரீபியன்'' தொடரில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இப்படத்தின் மூலம் இவருக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உருவாகினர்.

# ராஷ்மிகாவின் புதிய படத்தில் இணைந்த "கல்கி" ஸ்டண்ட் இயக்குனர்




"புஷ்பா" நடிகை ராஷ்மிகா மந்தனா நடிக்கும் அடுத்த படத்திற்கு "மைசா" எனப்பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை ரவீந்திர புல்லே எழுதி இயக்குகிறார். அஜய் மற்றும் அனில் சயபுரெட்டி ஆகியோர் தயாரிக்கின்றனர். இந்தப் படத்தில், ராஷ்மிகா 'மைசா' என்ற கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தில் பிரபல ஹாலிவுட் ஸ்டண்ட் இயக்குனர் ஆண்டி லாங் இணைந்திருக்கிறார். 2008 முதல் ஸ்டண்ட் இயக்குனராக செயல்பட்டு வரும் ஆண்டி லாங், இதுவரை தனது கெரியரில் 40க்கும் மேற்பட்ட படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பணியாற்றியுள்ளார். கல்கி 2898 ஏடி, லிகர், சனக் உள்ளிட்ட இந்திய படங்களிலும் இவர் பணியாற்றி இருக்கிறார்.

ராஷ்மிகா பாலிவுட்டில் "தமா" என்ற ஹாரர் படத்திலும் நடித்து வருகிறார்.

# நாக்கை கட்டுப்படுத்த முடியாமல் நிறைய பரோட்டா சாப்பிட்டேன் நித்யா மேனன்



இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி மற்றும் நித்யா மேனன் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'தலைவன் தலைவி'. சத்ய ஜோதி பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த படத்தில் யோகிபாபு, பாபாபாஸ்கர் ஆகியோர் முக்கியகதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

குடும்பப் பின்னணியைக் கதையாக வைத்து உருவாகி உள்ள இந்த படம் வரும் 25ம் தேதி வெளியாக உள்ளது. இந்த படத்தில் விஜய் சேதுபதி புரோட்டா மாஸ்டராக நடித்துள்ளார். சமீபத்தில் இந்த படத்தின் டிரெய்லர் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று, படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்க செய்தது.

இந்த நிலையில், நடிகை நித்யா மேனன் பேட்டி ஒன்றில், "மதுரையில் சூட்டிங் நடந்தபோது, என்னால் என் நாக்கை கட்டுப்படுத்த முடியாமல் நிறைய பரோட்டா சாப்பிட்டேன். அத்துடன் பரோட்டா போடவும் கற்றுக்கொண்டேன். படத்துக்காக மட்டுமல்ல, படப்பிடிப்பு இல்லாத நேரத்திலும் நிறைய பரோட்டா சாப்பிட்டேன்" என்று சுவரஸ்யமாக பேசினார்.

# சீன ஓபன் பேட்மிண்டன்: சாத்விக் சிராக் ஜோடி 2வது சுற்றுக்கு முன்னேற்றம்



சீன ஓபன் பேட்மிண்டன் போட்டி சீனாவின் சாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது .இதில், ஆண்கள் இரட்டையர் பிரிவில் இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவில் சாத்விக் சிராக் ஜோடி, ஜப்பானின் ஹிரோகி ஒகாமுரா கென்யா மிட்சுஹாஷி ஜோடியை எதிர்கொண்டது. இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி அபாரமாக செயல்பட்ட சாத்விக் சிராக் ஜோடி 2113, 219 என்ற நேர் செட் கணக்கில் ஹிரோகி ஒகாமுரா கென்யா மிட்சுஹாஷி ஜோடியை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறியது.

# மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை: இந்திய வீராங்கனை தீப்தி ஷர்மா முன்னேற்றம்




சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.), மகளிர்ஒருநாள்கிரிக்கெட் வீராங்கனைகளின் தரவரிசை பட்டியலை வெளியிட்டது. இதன்படி பேட்டர்ஸ் தரவரிசையில் இந்திய துணை கேப்டன் ஸ்மிர்தி மந்தனா (727 புள்ளி) முதலிடத்தில் தொடருகிறார். இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரு ஒருநாள் போட்டிகளில் முறையே 28, 42 ரன்களை எடுத்த அவர் தனது இடத்தை தக்கவைத்துள்ளார்.

ஹர்மன்பிரீத் கவுர் 5 இடம் சரிந்து 21வது இடத்தை பெற்றுள்ளார். மற்றொரு இந்திய வீராங்கனை தீப்தி ஷர்மா 10 இடங்கள் உயர்ந்து 23வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார். இங்கிலாந்துக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 62, 30 ரன்கள் வீதம் எடுத்ததால் அவர் இந்த ஏற்றத்தை கண்டுள்ளார்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் சோபி எக்லெஸ்டோன் (776) நம்பர் ஒன் இடத்தில் நீடிக்கிறார். ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி கார்ட்னெர், மேகன் ஸ்கட், இந்தியாவின் தீப்தி ஷர்மா ஆகியோர் முறையே 2வது, 3வது, 4வது இடத்தில் மாற்றமின்றி தொடருகின்றனர்.

# வாஷிங்டன் ஓபன் டென்னிஸ்: பென் ஷெல்டன் 3வது சுற்றுக்கு முன்னேற்றம்



பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள வாஷிங்டன் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் முன்னணி வீரரான பென் ஷெல்டன் (அமெரிக்கா), சகநாட்டு வீரரான மெக்கன்சி மெக்டொனால்ட் உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய பென் ஷெல்டன் 63, 64 என்ற நேர் செட் கணக்கில் மெக்கன்சி மெக்டொனால்டை வீழ்த்தி 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.